# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண் : 123/மா/2023**

**நாள் : 15.07.2023**

திரு. R.காதர்,
வேலூர். – முறையீட்டு மனுதாரர்

ஆணையர், வேலூர் மாநகராட்சி,
வேலூர். – எதிர்மனுதாரர்

வேலூர், இக்ராபள்ளி அருகில், சின்ன அல்லாபுரம் மெயின்ரோடு, 18/A–1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R.காதர் என்பவரின் 04.05.2023 நாளிட்ட மனு, 08.05.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 123/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

வேலூர், இக்ராபள்ளி அருகில், சின்ன அல்லாபுரம் மெயின்ரோடு, 18/A–1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.R. காதர் என்பவர் தனது 08.05.2023 நாளிட்ட மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"வேலூர் மாநகராட்சி அனைத்து மண்டலத்திலும் பொறியாளர் அலுவலகம் குடிநீர் இணைப்பு தொகை ரூபாய் 10,000 மற்றும் குடிநீர் இணைப்புக்கு பிறகு உடைத்த சாலையை சரி செய்ய பொதுமக்களிடம் ரூபாய் 5,000 வாங்கிய பணத்தில் சாலையை சரி செய்யாமல், மாநகராட்சியில் கணக்கில் சேர்க்காமல் ஊழல் முறைகேடு நடைபெறுகிறது.

சாலையை உடைத்து சாலை சரி செய்ய பொதுமக்களிடம் ரூபாய் 5,000 வாங்கிய பணத்திற்கு ரசீதும் தருவதில்லை. உடைந்த சாலையை சரி செய்வதில்லை. இதனால் பழுது அடைந்து சாலை அனைத்தும் வீணாகிறது. சாலையை சரி செய்ய வாங்கிய பணத்தில் சாலையை சரி செய்யாமல் மாநகராட்சியில் கணக்கில் சேர்க்காமல் ஊழல் முறைகேடு நடைபெறுகிறது.

இந்த ஊழலில் ஈடுபட்ட வேலூர் மாநகராட்சி அனைத்து மண்டலத்திலும் துணை ஆணையர், உதவிப்பொறியாளர், குழாய் ஆய்வாளர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுத்து

சாலை சரி செய்ய பொதுமக்களிடம் ரூபாய் 5000 வாங்கிய பணத்தை மாநகராட்சியில் கணக்கில் சேர்க்கவும் கேட்டுக்கொள்கிறோம்.

உதாரணமாக வேலூர் மாநகராட்சி மண்டலம் –4ல் மட்டும் 15,716 இணைப்பு, RTI தகவல்படி, ஒரு நபரிடம் சாலை சரி செய்ய 2600 பெருக்கினால் மொத்த தொகை 4,08,61,600 ரூபாய் ஊழல் நடைபெற்றது தெரிய வந்துள்ளது. வேலூர் மாநகராட்சி மண்டலம்–04ல் புதிய வார்டு 41,40,42,43 குடிநீர் இரவில் விடுவதால் வீண் விரயம் ஆவதை தடுக்க பகலில் தண்ணீர் விட பல தடவை மாநகராட்சி மண்டலம்–04ன் பொறியாளருக்கு தெரியப்படுத்தியும், குழாய் ஆய்வாளருக்கு தெரியப்படுத்தியும் நடவடிக்கை எடுக்கவில்லை. குடிநீருக்காக மாதம் ரூ.200 செலுத்தியும் பகலில் குடிநீர் வராததால் தண்ணீருக்காக போராடி வருகிறார்கள். RTI தகவலில் பகலில் தண்ணீர் விடுகிறோம் என்று பொய்யான தகவல் பல தடவை தகவல் தந்து ஏமாற்றுகிறார்கள். துறை ரீதியான நடவடிக்கை எடுக்க கேட்டு கொள்கிறேன்.

வேலூர் மாநகராட்சி மண்டலம்–04ல் புதிய வார்டு 41,40,42,43ல் ஆறு மாதமாக தெருவில் குடிநீர் பைப் உடைந்து குடிநீர் வீண் ஆவதை தடுக்க பல தடவை குழாய் ஆய்வாளர் திரு.ஐயப்பன் அவர்களிடம் தெரியப்படுத்தியும் நடவடிக்கை எடுக்கவில்லை. வேலூர் மாநகராட்சி மண்டலம் –04ல் 125–வது தெரு குழாயில் இரவில் தண்ணீர் வீண்விரயம் ஆவதை தடுக்க வால்வு அல்லது மூடி போடாமல், RTI தகவலில், வால்வு அல்லது மூடி போடப்பட்டது போன்று பொய்யான தகவல் தந்து தண்ணீரை வீண் விரயம் செய்த பொது தகவல் அதிகாரியிடம் துறை ரீதியான நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறோம். தெருவில் குடிநீர் பைப் உடைந்து குடிநீர் வீண் விரயமாகும் இடம் கஸ்பா பைபர்லைன் 1வது தெரு, 3வது தெரு, MC ரோடு, ஜே.ஜே.நகர், கே.கே.நகர், அஹமதுல்லா நகர், வசந்தபுரம் ரோடு, கஸ்பா ரெயில்வே பாலம் அருகில். ஆகையால், வேலூர் மாநகராட்சியில் உடனடியாக ஊழல் முறைகேடு, நிர்வாக சீர்கேடு ஒழித்து, ஊழல் லஞ்சத்தை ஒழித்து நம் நாட்டை காப்பாற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன். மக்களின் வரி பணத்தை சம்பளமாக பெற்று கொண்டு கடமையை தவறிய அனைத்து அதிகாரிகள் மீதும் துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

வேலூர் மாநகராட்சி அனைத்து மண்டலத்திலும் அனைத்து குடிநீர் இணைப்புக்கும் வாங்கிய தொகையுடன், சாலையை உடைத்து சரி செய்ய பொதுமக்களிடம் ரூபாய் 5,000 வாங்கிய தொகையை மாநகராட்சியில் கணக்கில் சேர்க்க வேண்டும். குடிநீர் இணைப்பு பின்பு சாலையை உடைத்து சரி செய்ய பொதுமக்களிடம் ரூபாய் 5,000 வாங்கிய தொகைக்கு மாநகராட்சியில் ரசீது வழங்க வேண்டும். குடிநீர் இணைப்பு பின்பு சாலையை உடைத்து சரி செய்ய பொதுமக்களிடம் ரூபாய் 5,000 வாங்கிய பின்பும் சாலையை சரி செய்யாமல் ஊழலில் ஈடுபட்ட வேலூர் மாநகராட்சி அனைத்து மண்டலத்திலும் உள்ள துணை ஆணையர், உதவிப் பொறியாளர், குழாய் ஆய்வாளர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுத்து ஊழல்வாதிகளை ஒழிக்கவும் வசூலிக்கப்படும் தொகையை மாநகராட்சியில் கணக்கில் சேர்க்கவும் கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீருக்காக மாதம் 200 செலுத்தியும் இரவில் குடிநீர் விட்டு கால்வாயில் வீண் விரயம் செய்தவரிடமே அதாவது துணை பொறியாளர் திரு.செல்வராஜ், குழாய் ஆய்வாளர் திரு.ஐயப்பன் அவர்களிடம் 12 மாதம் குடிநீர் வரியை வசூலிக்க ஆணையிட கேட்டுக்கொள்கிறேன்.

மக்களின் வரி பணத்தை சம்பளமாக பெற்று கொண்டு கடமை தவறிய அனைத்து அதிகாரிகளின் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, இம்முறைமன்ற நடுவத்தின் 19.05.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் வேலூர் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.**

3) வேலூர் மாநகராட்சி, மண்டலம்–04, உதவி ஆணையர் தனது 04.07.2023 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

" வேலூர் மாநகராட்சி மண்டலம் 1,2,3 மற்றும் 4 வார்டு பகுதிகளில் புதிய குடிநீர் இணைப்பு வழங்க வீட்டு இணைப்பு பகுதிக்கு ரூ.10,000/– வைப்பு தொகை (Deposit Amount) ஆக பெறப்படுகிறது. சாலை சீரமைப்பு கட்டணம் தார்சாலை ரூ.4,445/–, சிமெண்ட் சாலை ரூ.5,148/– மாநகராட்சி கருவூலத்தில் வசூலிக்கப்படுகிறது. அதற்குரிய தொகைக்கான ரசீது விண்ணப்பதாரருக்கு நேரடியாக வழங்கப்படுகிறது. மாநகராட்சியில் கணினி ரசீதுதான் வழங்கப்படுகிறது. எந்த மனுதாரர் மூலமாகவும் பணம் நேரடியாக வசூலிக்கப்படுவதில்லை. இதில் எந்தவித ஊழல் முறைகேடும் நடைபெறவில்லை.

வேலூர் மாநகராட்சி மண்டலம் 4–ல் புதிய வார்டு 40,41,42 மற்றும் 43 குடிநீர் மேல்நிலை நீர் தேக்க தொட்டிக்கு தமிழ்நாடு வடிகால் வாரியம் (TWAD Board) மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 24 x 7 என்ற திட்டத்தின் மூலம் குடிநீர் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றது. அதன் மூலம் சுழற்சி முறையில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

வேலூர் மாநகராட்சி, மண்டலம்–04, வார்டு பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் நடைபெறும்போது பைப்லைன்கள் உடைப்பு ஏற்பட்டு சரி செய்யப்பட்டு வருகின்றது. பைப்லைன்கள், Distribute Lineகள் மற்றும் குடிநீர் பைப்பு உடைப்பு ஏற்படும்போது உடனடியாக ஒப்பந்ததாரர் மூலம் சரி செய்யப்பட்டு வருகின்றது" என தெரிவித்துள்ளார்.

**4) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 06.07.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 21.06.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**5) மனுதாரர் 06.07.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.**

" வேலூர் மாநகராட்சியில் குடிநீர் இணைப்புத் தொகை ரூபாய் 10,000/– மற்றும் இணைப்புக்குப் பின்னர் சாலையை உடைத்து சரி செய்ய ரூபாய் 5,000/– கட்டணமாக பெறுகின்றனர். ஆனால், குடிநீர் இணைப்பு கொடுப்பதற்காக உடைக்கப்பட்ட சாலையை மாநகராட்சியினர் சரி செய்வதில்லை. மேற்கண்ட சாலையை உடைத்து சரி செய்ய வசூலிக்கப்படும் தொகையான ரூபாய் 5,000க்கு மாநகராட்சியில் கணக்கு ஏதுமில்லை. மேலும் அதற்கான ரசீது ஏதும் வழங்கப்படுவதில்லை. மாநகராட்சியால் குடிநீர் இணைப்பிற்காக

வெட்டப்படும் பள்ளம் சரிவர மூடப்படுவதில்லை. இதனால் பொதுமக்களுக்கு அதிக சிரமம் ஏற்பட்டு வருகிறது.

வேலூர் மாநகராட்சியில் மண்டலம்–4ல் குடிநீர் இரவில் விடுவதால் அங்குள்ள பெரும்பாலான மக்கள் சிரமப்படுகின்றனர். எனவே, குடிநீரை இரவில் அளிப்பதற்கு பதிலாக பகலில் அளித்திடவும், மேலும் அங்குள்ள குழாய்களில் கசிவு ஏற்பட்டு குடிநீர் வீணாகி வருகிறது. மேற்கண்ட பொருள் குறித்து மாநகராட்சிப்பொறியாளர் மற்றும் குழாய் ஆய்வாளருக்கு புகார்கள் அனுப்பியும், அவர்கள் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. எனவே, அங்குள்ள பொதுக் குழாய்களில் சரியாக வால்வை பொருத்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இம்முறைமன்றத்தில் என்னால் அளிக்கப்பட்ட எனது 04.05.2023 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**6) வேலூர் மாநகராட்சியின் உதவிப்பொறியாளர் மற்றும் பிட்டர் இருவரும் 06.07.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளனர் :**

" வேலூர் மாநகராட்சி மண்டலம் 1,2,3 மற்றும் 4–வது வார்டு பகுதிகளில் புதிய குடிநீர் இணைப்பு வழங்க வைப்புத்தொகையாக ரூ.10,000/– பெறப்படுகிறது. மேலும் சாலை சீரமைப்பு கட்டணமாக தார் சாலைக்கு ரூ.4,455/– மற்றும் சிமெண்ட் சாலைக்கு ரூ.5,148/– மாநகராட்சி கருவூலத்தில் வசூலிக்கப்பட்டு, அதற்கான கணினி ரசீது விண்ணப்பதாரர்களுக்கு நேரடியாக வழங்கப்படுகிறது. மனுதாரர் குறிப்பிட்ட இடங்களில் UGD போன்ற திட்டப்பணிகள் நடைபெறுவதால் அங்கு மாநகராட்சியால் தெருக்களை சீரமைக்க இயலவில்லை. தற்போது திட்டப்பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளதாலும், மேற்கண்ட சீரமைப்புப் பணிகளுக்கு ஒப்பளிப்பு (Sanction) பெறப்பட்டுள்ளதாலும் மனுதாரர் குறிப்பிட்டுள்ள தெருக்களில் உள்ள சாலைகள் விரைவில் சீரமைக்கப்படும் என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேற்கண்ட மண்டலம் 4ல் குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிக்கு TWAD Board மூலம் சுழற்சி முறையில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் 400 தூய்மைப்பணியாளர் குடும்பங்கள் அங்கு வசிக்கின்றனர். அவர்கள் தங்களுக்கு இரவில் குடிநீர் வழங்குமாறு கோரிக்கை மனுக்கள் அளித்ததன்பேரில் அங்கு இரவில் குடிநீர் அளிக்கப்படுகின்றன என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும், அங்கு பாதாள சாக்கடை திட்டப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதால் அங்குள்ள பைப்லைனில் உடைப்பு ஏற்பட்டு, அவை உடனுக்குடன் சரிசெய்யப்பட்டு வருகிறது என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்து அதற்கான புகைப்பட நகல்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறோம்" என தெரிவித்துள்ளனர்.

7) மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் வேலூர் மாநகராட்சி உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் வேலூர் மாநகராட்சி உதவிப்பொறியாளர், பிட்டர் இவர்களின் வாக்குமூலம்

ஆகியவற்றின் அடிப்படையிலும் இந்நிகழ்வில் இம்முறைமன்ற நடுவம் பின்வருமாறு ஆணையிடுகிறது.

மனுதாரர் வேலூர் மாநகராட்சியில் குடிநீர் இணைப்பு தொடர்பாக பெறப்படும் தொகைக்கு ரசீது ஏதும் வழங்கப்படுவதில்லை, இரவில் குடிநீர் விடுகின்றனர் மற்றும் குழாய்களில் கசிவு ஏற்பட்டு குடிநீர் வீணாகி வருவதால் சரியாக வால்வை பொருத்திடவும் இம்முறைமன்ற நடுவத்தை கோரியுள்ளார்.

குடிநீர் இணைப்பிற்கு பெறப்படும் தொகைக்கு கணினி ரசீது வழங்கப்படுவதாகவும் மண்டலம்–04ல் வசிக்கும் 400 தூய்மைப்பணியாளர் குடும்பங்கள் இரவில் குடிநீர் வழங்க கோரியதால் இரவில் குடிநீர் விடப்படுவதாகவும் அங்குள்ள குடிநீர் மேல்நிலை நீர் தேக்க தொட்டிக்கு தமிழ்நாடு வடிகால் வாரியம் (TWAD Board) மூலம் குடிநீர் சுழற்சி முறையில் வழங்கப்பட்டு வருகிறது எனவும் மனுதாரர் குறிப்பிட்ட இடங்களில் UGD போன்ற திட்டப்பணிகள் நடைபெறுவதால் அங்கு மாநகராட்சியால் தெருக்களை சீரமைக்க இயலவில்லை எனவும், தற்போது திட்டப்பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளதால் மனுதாரர் குறிப்பிட்டுள்ள தெருக்களில் உள்ள சாலைகள் விரைவில் சீரமைக்கப்படும் என மாநகராட்சி அலுவலர்கள் இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துள்ளவாறும் மற்றும் உதவி ஆணையர் அவரது அறிக்கையில் தெரிவித்தவாறும் விரைந்து மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ள குறைகளை களைந்து பொதுமக்கள் பயன்பெற்றிட உரிய உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேலூர் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

அடிப்படை பணிகளில் ஏற்படக்கூடிய தொய்வினை மற்றும் மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ள மேற்சொன்ன குறைபாடுகளை ஆய்வு செய்து அவற்றில் ஏற்படக்கூடிய காலதாமதங்கள்/குறைகளைக்களைய அனைத்து மாநகராட்சி ஆணையர்களுக்கும் அறிவுரைகளை வழங்கிடுமாறும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

2023–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 15–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. R. காதர்,
   18/A-1, சின்ன அல்லாபுரம் மெயின்ரோடு,
   இக்ராபள்ளி அருகில்,
   வேலூர் – 632 001.

2. ஆணையர்,
   வேலூர் மாநகராட்சி,
   வேலூர்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர்
   நகராட்சிநிர்வாகஇயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜாஅண்ணாமலைபுரம்,
   சென்னை– 600 028.

4. இணைஇயக்குநர்
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜாஅண்ணாமலைபுரம்,
   சென்னை– 600 028.

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

செயலாளர்(முகூ.பொ)